**செய்தி வெளியீடு எண்: 05/2024** **நாள்: 06.01.2024**

## பத்திரிக்கைச் செய்தி

## மெட்ரோ இரயில் கோயம்பேடு பணிமனையில் மின்னணுவியல் ஆய்வகம் நிறுவப்பட்டுள்ளது

சென்னை மெட்ரோ இரயில் கோயம்பேடு பணிமனையில், மெட்ரோ இரயில் பிரிவில், அதிநவீன மின்னணுவியல் ஆய்வகம் இன்று 06.01.2024 சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குனர் திரு.ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்) அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் ஆலோசகர் திரு. ராமசுப்பு, (தொடர்வண்டி மற்றும் இயக்கம்), தலைமை பொது மேலாளர் திரு. ஏ.ஆர்.ராஜேந்திரன் (தொடர்வண்டி மற்றும் இயக்கம்), கூடுதல் பொது மேலாளர் திரு. சி.பாலமுருகன், (தொடர்வண்டி மற்றும் இயக்கம்), சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

ஆய்வகம் முற்றிலும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய எலக்ட்ரோ ஸ்டேடிக் டிஸ்சார்ஜ் (ESD) பாதுகாப்புடன் இயங்குகிறது. மெட்ரோ இரயில் மற்றும் பிற அமைப்புகளின் மின்னணு கூறுகளுக்கான மேம்பட்ட ஆய்வு, சோதனை, சரிசெய்தல் மற்றும் பழுதுபார்க்கும் வசதி ஆகியவற்றைக் கொண்டுள்ளது. மெட்ரோ இரயிலின் முக்கிய துணை அமைப்புகளான இரயில் கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு அமைப்பு (TCMS), பயணிகள் அறிவிப்பு மற்றும் பொது தகவல் அமைப்பு (PAPIS), கதவு அமைப்பு, வெப்பமாக்கல், காற்றோட்டம் மற்றும் காற்றுச்சீரமைத்தல் அமைப்பு (HVAC) போன்றவைகளுக்கு தனிப்பட்ட சோதனை மற்றும் பணிநிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இன்ஜினியர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் கொண்ட குழுவால் நிர்வகிக்கப்படும் இந்த ஆய்வகம், உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் உள்செயல் திறன் மேம்பாட்டு முயற்சியாகும். இந்த வசதியைப் பயன்படுத்தி, பணியாளர்களின் பயிற்சி மேம்படுத்தப்படும், அசல் உபகரண உற்பத்தியாளரைச் சார்ந்திருப்பது குறைக்கப்பட்டு, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு குறிப்பிடத்தக்க செலவுகள் சேமிக்கப்படும். மின்னணுவியல் ஆய்வகம் நிறுவுவதற்கான தோராயமான செலவு ரூ.50 லட்சம்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**